# ஆர்.எஸ்.எஸ். குரலில் மிமிக்ரி செய்யும் ஆளுநர் ஆர்.என்.ரவி!

மாநிலங்கள் எதன் அடிப்படையில் அமைய வேண்டும் என்பது குறித்து நீண்ட நெடிய விவாதங்கள் நடைபெற்றுள்ளன. மொழி வழியில்தான் மாநிலங்கள் அமைய வேண்டும் என்ற கருத்தோட்டத்தை முன் னுக்குப் பின் முரணின்றி முன்வைத்தது இந் திய கம்யூனிஸ்ட் இயக்கம். அகண்ட பாரத ஆசையில் உழன்று கொண்டிருந்த ஆர். எஸ்.எஸ். இயக்கம் மொழி வழி மாநிலம் என்ற கண்ணோட்டத்தையே ஏற்கவில்லை. இன்னும் சொல்லப் போனால், மாநிலங்கள் என்பதேகூட ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு எட் டிக்காயாய் கசந்தது. அதிகாரங்கள் அனைத் தும் குவிக்கப்பட்ட மைய அரசு என்பதே அவர்களது விருப்பம்.

இந்தியாவை நூறு பகுதிகளாகப் பிரித்து அவை யாவும் தில்லியின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்றே ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வால்க்கர் கூறி வந்தார். மொழிவழி மாநிலங்கள் பிராந்தியவாதத்தை வளர்க்கும் என்றும், அபாயகரமான பிரிவி னைக்கு வழி வகுத்துவிடும் என்றும் கோல் வால்க்கர் கும்மியடித் தார். மாவட்டங்களை இணைத்து 'ஜனபாத' அமைப்பு களை உரு வாக்க வேண்டும் என்பதே கோல்வால்க் கரின் கருத்து. ஜனசங்கத்தின் பொதுச் செய லாளரான தீனதயாள் உபாத்யாயா, நூற்றுக் கும் மேற்பட்ட ஜனபாத அமைப்புகளை உரு வாக்கி, மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும். மொழிவழி மாநிலங்களை முற்றாக அழிக்க வேண்டும் என்றார். காலாவதியான இந்த கருத்துக்கு ஆளுநர் ரவி இப்போது புகை போட்டு பூஜை நடத்துகிறார்.

தெலுங்கானா மாநிலம் உருவான நாள் ஜூன் 2 ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நாளில் நடை பெற்ற விழாவில் பேசிய ஆளுநர் ஆர்.என்.ரவி, “ஆட்சி செய்வதற்கு உதவும் என்பதால்தான் மாநிலங்கள் உரு வாக்கப்பட்டன. மலையாளிகள், தமிழர்கள், பீகாரிகள் என்று அழைக்கப்படுவது இந்தியா என்ற ஒற்றைச் சிந்தனைக்கு எதிராக உள் ளது” என்று உளறி யிருக்கிறார்.

மாநிலங்களுக்கான தனி அடையாளம் மக்களைப் பிரிக்கும் மனநிலையில் உரு வாக்கப்படுகிறது. ஒரே பாரதம் என்ற கொள் கைக்கு இது எதிரானது. இந்தி யர்களாக ஒன் றுபடும் நோக்கத்தை இது வலுவிழக்கச் செய்கிறது என்றெல்லாம் பேசிச் சென்ற அவர், சிவன், ராமர், கிருஷ்ணா, பெண் கட வுள்கள் ஆகியவை ஒன்றாக உள்ளது. மொழி, உணவு என்று நாம் வேறு பட்டா லும், கலாச்சாரத்தால் ஒன்றுபடுகிறோம். மாநிலத்தில் கலாச்சாரம் என எதுவும் இல்லை. தமிழர்கள், தெலுங்கர்கள் போன்ற அரசியல் அடையாளங்களை மொழிவழி மாநிலங்கள் உருவாக்கியுள்ளன. இது போன்ற கற்பனை அடையாளங்கள் நாட்டின் வலிமை யைக் குறைக்கிறது என்று பேசியுள் ளார்.

இந்தியா விடுதலைப் பெறுவதற்கு முன்பே நீண்ட போராட்டத்தின் பலனாக 1936 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி ஒரிய மொழிப் பேசும் மக்களுக்காக தனி மாநிலம் பிறந்தது. காங்கிரஸ் தலைவரான பொட்டி ஸ்ரீராமுலு, ராயலசீமா, கடலோர ஆந்திரப் பகுதிகளை இணைத்து ஆந்திரப் பிரதேச மாநிலத்தை உருவாக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். அன்றைய ஒன்றிய அரசு இதை ஏற்க மறுத்ததால், 1952 ஆம் ஆண்டு அக் டோபர் 19 ஆம் தேதி சென்னையில் உண் ணாநோன்பினைத் துவக்கினார். தொடர் உண்ணாவிரதத்தால் 1952 டிசம்பர் 15 ஆம் தேதி மொழிவழி ஆந்திர மாநிலத்திற்காக உயிர்த் தியாகம் செய்தார். அவரது இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

இந்தப் பின்னணியில்தான் 1952 டிசம்பர் 19 ஆம் தேதி பிரதமர் நேரு, தெலுங்கு பேசும்

**- மதுக்கூர் ராமலிங்கம்**

மக்களுக்கு தனி மாநிலம் உருவாக்கப்படும் என்று அறிவித்தார். 1953 அக்டோபர் 1 ஆம் தேதி சென்னை ராஜதானியிலிருந்து பிரிக்கப் பட்டு ஆந்திர மாநிலம் உருவானது.

இப்போது பொட்டி ஸ்ரீராமுலுவின் உயிர்த் தியாகத்தை ஆளுநர் ஆர்.என்.ரவி கொச் சைப் படுத்தி யிருக்கிறார். சில மாதங்களுக்கு முன்பு தமிழ்நாடு என்று அழைக்கக் கூடாது. தமிழகம் என்றுதான் அழைக்க வேண்டும் என ஆளுநர் ரவி வம்பு வளர்க்க, பல திசைக ளிலிருந்தும் வந்து குவிந்த அம்பு களால் நொந்து போன அவர், நான் அந்த அர்த்தத் தில் சொல்லவில்லை என அசடு வழிந்தார். தமிழ்நாடு என்கிற பெயர் மாற்றத்தின் பின்ன ணியில், விருது நகர் தியாகி சங்கரலிங்கனா ரின் உயிர்த் தியாகம் உள்ளது. தமிழ்நாடு தீர்மானத்தை மாநிலங்களவை யில் கொண்டு வந்தவர் தமிழ்நாடு பொதுவுடமை இயக்கத் தலைவர் தோழர் பி.இராமமூர்த்தி. தீர்மானம் விவாதத்திற்கு வந்த போது, அவர் சிறையிலிருந்ததால், வங்க கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர் தோழர் பூபேஷ் குப்தா இதை முன்மொழிந்து பேசினார். அப்போது, மாநிலங்களவை உறுப்பினராக இருந்த அண்ணா, இதை ஆதரித்து உரையாற்றி னார். பிறகு, 1967இல் அண்ணா முதல்வ ரான நிலையில், சென்னை ராஜ தானியின் பெயர் தமிழ்நாடு என்று மாற்றப்பட்டது. அதே போல, கேரள மாநில உருவாக்கத்தில் முன்னி ன்று முதன்மை பணியாற்றியவர் கள் தோழர்கள் இ.எம்.எஸ்., ஏ.கே.கோபா லன் போன்ற தலைவர்கள். மராட்டிய மொழி அடிப்படையிலான சம்யுக்த மகாராஷ்டிரம், மலையாள மொழி அடிப்படையிலான ஐக் கிய கேரளம், தெலுங்கு மொழி அடிப்படையி லான விசால ஆந்திரம், தமிழ் மொழி அடிப்ப டையிலான தமிழ்நாடு என்ற கோரிக்கைகளை உரத்த குரலில் முழங்கிய வர்கள் கம்யூனிஸ்டுகள். இது மொழிவழி உணர்வுகளை அங்கீகரித்து அதே நேரத்தில் இந்திய ஒருமைப்பாட்டின் வேருக்கு நீர்ப் பாய்ச்சுகிற உயரிய கோட்பாடாகும்.

பழைய மன்னராட்சி கால கனவில் இருந்த சனாதனிகள், மொழிவழி மாநிலங்க ளுக்காக ஒரு துரும்பையும் கிள்ளிப் போட்ட வர்கள் அல்ல. இன்னும் சொல்லப் போனால், அதை கெடுக்க இயன்ற அனைத்தையும் செய்தவர்கள்.

இப்போதும் மொழிவழி மாநிலங்கள் என் பது இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிரானது அல்ல. அந்த உயரிய கோட்பாட்டிற்கு உரம் சேர்ப்பது. கூட்டாட்சி க்கு வழிவகுப்பது. ஆனால், ஆளுநர் ரவி வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், மொழிவழி மாநிலங்கள் என்ற கோட்பாட்டிற்கு எதிராக விஷம் கக்கி வருகிறார். இந்தியா முழுவதும் கடவுள்கள் ஒன்றாகவே இருப்பதாக கயிறு திரிக்கிறார் ஆளுநர். ஆனால் இவர் பிறந்த பீகாரில்தான் சமண, புத்த மதங்கள் உரு வாகின. புத்த மதத்தின் 'விஹார்' என்பதிலிருந்துதான் பிஹார் என்றே சொல்லே உருவானது. அங் குதான் நாளந்தா பல்கலைக்கழகம் இருந் தது. ஆனால் இதை யெல்லாம் மறைத்து விட்டு ஒரே நாடு, ஒரே மதம் என்ற ஆர்.எஸ். எஸ். குரலை அப்படியே மிமிக்ரி செய்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி.

தமிழ்நாட்டில் தெலுங்கு மொழி பேசுகிற வர்களும், ஆந்திராவில் தமிழ் மொழி பேசுகி றவர்களும் ஒன்றுபட்டே வாழ்கின்றனர். இவர்தான் குட்டையைக் குழப்பி ஒற்று மையை சீர்குலைக்கிறார்.

தெலுங்கானா மாநிலம் உருவான நாளில் அந்த மாநிலத்தில் நடத்தப்பட்ட விழாவில், ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் அழைக் கப்படவில்லை. அந்த அளவிற்கு மாநில அர சோடு முரண்பட்டு நிற்கிறார் அவர். இவரோ, தமிழ்நாட்டில் இருந்து கொண்டு ஒவ்வொரு நாளும் மாநில உரிமைகளுக்கு எதிராகவும் உணர்வுகளுக்கு எதிராகவும் பேசி கலகம் செய்ய நினைக்கிறார். அதன் ஒரு பகுதியே, ஊட்டியில் இவர் நடத்தும் துணை வேந்தர்க ளின் போட்டி மாநாடு. இவருடைய உள்ளம் முழுவதும் பொங்கி வழிவது ஆர்.எஸ்.எஸ். சிந்தனையே. இவர், அந்த அமைப்பில் சேர்ந்து அவர்களது கருத்தை பேசட்டும். இல் லையேல், ஆளுநர் வேலையை மட்டும் பார்க்கட்டும்.

**நன்றி : 'தீக்கதிர்' 06.06.2023**

---

# மோடி ஆட்சியில் நடந்த பெரிய ரயில் விபத்துகள்!

புதுடெல்லி, ஜூன் 7 -

2022 ஜனவரி 13: ராஜஸ் தானின் பிகானிரில் இருந்து அசாம் மாநிலம் கவுஹாத் திக்கு சென்று கொண்டிருந்த பிகானிர் - கவுஹாத்தி எக்ஸ்பி ரஸின் 12 பெட்டிகள் தடம் புரண்டன. மேற்கு வங்க மாநி லம் ஜல்பைகுரியில் இந்த விபத்து நடந்தது. இதில் ரயி லின் இன்ஜின் மோட்டார் திறந்து தண்ட வாளத்தில் விழுந்தது. அதன்மீது ரயில் ஏறியதால் இந்த விபத்து ஏற் பட்டது. இந்த விபத்தில் குறைந்தது 9 பேர் உயிரிழந் தனர்.

2017, ஆகஸ்ட்19 : உத்கல் எக்ஸ்பிரஸ் ரயிலின் 14 பெட்டி கள் உத்தரப் பிரதேசத்தின் கத் தௌலியில் தடம் புரண்டன. இந்த ரயில், பூரியில் இருந்து ஹரித்வாருக்கு சென்று கொண்டிருந்தது. இங்கு தண் டவாளத்தை அகற்றி சீரமைக் கும்பணி நடந்து கொண்டி ருந்தது. இந்த விபத்தில் 23 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்திற்குப் பிறகு சுரேஷ் பிரபு ரயில்வே அமைச்சர் பத வியை ராஜினாமா செய்தார்.

2017, ஜனவரி 22: ஆந்திர பிரதேசத்தின் விஜயநகரம் மாவட்டத்தில் ஹிராகுட் எக்ஸ் பிரஸ் ரயிலின் 8 பெட்டிகள் தடம் புரண்டன. இந்த விபத் தில் சுமார் 40 பேர் உயிரிழந் தனர்.

2016, நவம்பர் 20: பாட்னா - இந்தூர் விரைவு ரயிலின் 14 பெட்டிகள் கான்பூர் அருகே புக்ராயனில் தடம் புரண்டன. இந்த விபத்தில் சுமார் 150 பேர் உயிரி ழந்த னர்.

2015, மார்ச் 20: டேரா டூன் - வாரணாசி ஜனதா எக்ஸ்பிரஸ் தடம் புரண்டது. இந்த விபத்தில் சுமார் 35 பேர் உயிரிழந்தனர். உத்தரப் பிர தேச மாநிலம் ராய்பரேலி மாவட்டத்தில் இந்த விபத்து நடந்தது.

2014, ஜூலை 24: ஹைத ராபாத் அருகே ரயில்வே கிரா சிங்கில், பள்ளி பேருந்தும் ரயி லும் மோதியதில் குறைந்தது 15 பள்ளிக் குழந்தைகள் உயி ரிழந்த னர். மேடக் மாவட்டம் மாசாய்பேட்டை பகுதியில் உள்ள ஆளில்லா ரயில்வே கிராசிங்கில் இந்த விபத்து நடந்தது.

2014, மே 26: உத்தரப் பிர தேசத்தில் சந்த் கபீர் நகர் மாவட்டத்தில் உள்ள சுரேப் ரயில் நிலையம் அருகே கோரக்தாம் எக்ஸ்பிரஸின் 6 பெட்டிகள் தடம் புரண்டு சரக்கு ரயிலுடன் மோதியதில் 25க்கும் மேற்பட்ட பயணிகள் உயிரிழந்தனர். இந்த விபத் தில் 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

---

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்: முதல்வர் சிறப்புரை!

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

கடலூர், ஜூன் 7 -

சென்னையில் இன்று நடைபெறும் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழா பொதுக்கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட் டத்தினர் பெருந்திரளாக கலந்துக் கொள்ள வேண்டு மென கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலா ளர் அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் விடுத் துள்ள அறிக்கையில் கேட் டுக் கொண்டுள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

புதன்கிழமை மாலை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழா பொதுக் கூட்டம் கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்க ளின் தலைமையில் வட சென்னை, புளியந்தோப்பு, பின்னி மில் மைதானத்தில் உலகே வியந்து பார்க்க, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலை வர்கள் பங்கேற்கும் பொதுக்கூட்டமாய், இந் திய சரித்திரத்தை மாற்றிட உறுதி ஏற்கும் நிகழ்வாக நடைபெறவுள்ளது.

அதுசமயம், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக செயலாளர் கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், ஒன்றிய குழுத் தலைவர்கள், மாவட்ட ஒன்றியக் குழு உறுப்பினர் கள், நகர மன்ற தலைவர் கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், இளைஞ ரணி, மாணவரணி, மகளி ரணி, இலக்கிய அணி, கலை, இலக்கிய, பகுத்தறி வுப் பேரவை, தொண்ட ரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, மீனவ ரணி, நெசவாளர் அணி, விவசாய அணி,

விவசாயத் தொழிலா ளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிரா விடர் நலக்குழு அணி, சிறு பான்மையி னர் நல உரி மைப்பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்புசாராதொழிலா ளர்அணி, அயலக அணி, தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

கூட்டாட்சிக் கோட்பாட்டுக்கு எதிராக - அத்துமீறி செயல்படும்

# ஆளுநர்களின் பிடியிலிருந்து பல்கலைக் கழகங்கள் மீளட்டும்!

## 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 7 -

ஆளுநர் பிடியிலிருந்து பல்கலைக் கழகங்கள் மீளட்டும் என்று 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

இதுகுறித்து 06.06.2023 தேதிய 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ள தாவது:

உதகையில் பல்கலைக்க ழக துணை வேந்தர் களின் இரண்டு நாள் மாநாட்டை ஆளு நர் ஆர். என்.ரவி நடத்துகிறார். கல்வி என்பது ஒத்திசை வுப் பட்டி யலில் இருக்கும் நிலையில் ஆளுநர் தன்னிச்சையாக இந்த மாநாட்டை கூட்டியி ருப்பது கண்டிக்கத்தக்கது.

'உயர் கல்வி நிறுவ னங்க ளில் பாடப்புத்தகங்க ளை தமிழ் மொழியில் மொழி பெயர்ப்பது' என்ற தலைப்பில் இந்த மாநாடு நடைபெறுவதாக கூறப் பட்ட போதும், ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை புகுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கமாக உள்ளது.

ஒன்றிய அரசின் புதிய கல் விக் கொள் கையை ஏற்க இய லாது என்றும், தமிழ்நாட்டிற் கென்று தனித்த கல்விக் கொள் கையை உரு வாக்கப் போவதா கவும் அறிவித்து அதற்கென்று ஒரு குழுவை தமிழ்நாடு அரசு அமைத்துள்ள நிலை யில், ஒன் றிய அரசு கல்விக் கொள்கை யின் முகவராக மாறி ஆளுநர் தொடர்ந்து அத்துமீறி செயல் பட்டு வருகிறார்.

தமிழ்நாடு பல்கலைக்கழ கங்களில் இணை வேந்தராக செயல்படும் மாநில உயர் கல் வித் துறை அமைச்சர் இந்த





மாநாட்டில் பங்கேற்க வில்லை. ஆனால் பன்னாட்டு தொழில் நுட்ப தனியார் நிறுவனமான சூ ஹோ பல்கலைக் கழகத்தின் நிறுவனரும், ஆர்எஸ்எஸ் ஆத ரவா ளருமான ஸ்ரீதர் வேம்பு மாநாட்டில் பங்கேற்ப தாக ஆளு நர் மாளிகை அறிவித்துள்ளது.

இதேபோன்று ஏற்கெனவே பல்கலைக்கழக துணை வேந் தர் மாநாட்டை ஆளுநர் தன் னிச்சையாக நடத்தியுள்ளார். கல்வித் துறை மட்டுமின்றி பல் வேறு துறைகளில் ஒரு மாநில அரசுக்கெதிராக ஒரு போட்டி அர சாங்கத்தை ஆளுநர் நடத்தி வருவது கூட்டாட்சிக் கோட்பாட் டுக்கு எதிரானது.

இதேபோன்ற ஒரு மாநாட்டை கடந்த ஏப்ரல் 25, 26 தேதிகளில் ஆளுநர் நடத்தி னார். இந்த மாநாட்டில் புதிய தேசிய கல்விக்கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று துணை வேந்தர்களை உசுப்பி விட்டார். இப்போது பாடத் திட்டங்களை தமிழில் மொழி பெயர்ப்பது தொடர்பாக என்ற பெயரில் துணை வேந்தர் கள் மாநாட்டை நடத்துகிறார்.

தமிழ்நாடு பல்கலைக்கழ கங்களுக்கு மாநில அரசே துணைவேந்தர்களை நியமிக்க வேண்டு மென்று தமிழ்நாடு சட் டப் பேரவையில் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் ஒப்பு தலுக்கு அனுப்பப்பட்டுள் ளது. நீட் தேர்வுக்கு விலக்குக் கோரும் மசோதாவை கிடப்பில் போட் டுள்ளது போல இந்த மசோதாவையும் ஆளுநர் முடக்கி வைத்துள்ளார். குறிப்பிட்ட கால வரை யறைக் குள் மசோதாக்கள் தொடர்பான முடிவை தெரிவிக்க வேண்டும் என ஆளுநர்களுக்கு உச்சநீதி மன்றம் அறிவுறுத்தியுள்ள நிலையில் இந்த மசோதாக்கள் குறித்த தனது முடிவை ஆளுநர் தெரிவிக்க வேண்டும். கேரள அரசும் இதே போன்ற மசோ தாவை நிறைவேற்றியுள்ளது. ஆளுநர்களின் பிடியிலிருந்து பல்கலைக்கழ கங்களை மீட் கும் காலம் வந்துவிட்டது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

---

பாரம்பரியத்தை மீட்டெடுத்து

# முதல்வர் கொண்டுவந்து கல்வித்துறையை தலைநிமிரச் செய்துள்ளார்!

## ஆசிரியர் சங்கங்கள் பாராட்டு!

சென்னை, ஜூன் 7 -

பாரம்பரியத்தை மீட் டெத்து பழைய நிலைக்கு கல்வித் துறையை தலைநி மிர செய்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பள்ளிக் கல்வித்துறை அமைச்ச ருக்கு ஆசிரியர் சங்கங்கள் பாராட்டு தெரிவித்துள் ளன.

**தியாகராஜன்** (மாநில தலைவர் தமிழ்நாடு ஆசிரி யர் முன்னேற்ற சங்கம்): அ.தி.மு.க. ஆட்சியின் போது 2017 பள்ளிகளில் துறையின் உயர் பதவி யான பள்ளி கல்வித்துறை இயக்குனர் பணியிடம்

இருக்கும்போது, பள் ளிக் கல்வி ஆணையர் என்று ஒரு புதிய பதவி உரு வாக்கி அதில் இந்திய ஆட்சி பணியைச் சேர்ந்த அதிகா ரியை நியமனம் செய்தனர். அவ்வாறு நியம னம் செய்யும்போது ஆணையர் பணியிடத்தை ரத்து செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்றம் சார்பாக கடு மையான எதிர்ப்பை பதிவு

செய்தோம். அப்போ தைய தி.மு.க. எதிர்க்கட்சி தலைவர் ஸ்டாலினிடம் முறையீடு செய்யப் பட்டது.

ஆணையர் பணியி டத்தை நீக்கினால் அர சிற்கு ஏதோ இழுக்கு வந்து விடும் என்றால் நினைக்காமல் ஆசிரியர்கள் மாணவர்கள் நலனில் அக்க றையுள்ள முதலமைச்சர் எங்கள் கோரிக்கை ஏற்று ஆணையர் பணியிடத்தை ரத்து செய்துவிட்டு பள்ளிக் கல்வித்துறைக்கு மிகுந்த அனுபவம் வாய்ந்த அறி வொளி நியமனம் செய்யப் பட்டுள்ளார். பள்ளிக்கல் வித்துறை ஆணையர்

பணியில் ரத்து செய்து பள்ளிகளில் துறை இயக்கு னர் பணியிடத்தை உரு வாக்கிய தமிழ்நாடு முதல மைச்சருக்கும் இந்த கோரிக்கையை தொடர்ந்து முதல்வர் கவனத்திற்கு கொண்டு சென்ற பள்ளி கல்வித் துறை அமைச்சருக் கும் ஆசிரியர்கள் சார்பாக வும் மாணவர் தமிழ்நாடு ஆசிரியர் முன் னேற்ற சங் கத்தின் சார் பாகவும் நன் றியை தெரிவித்துக் கொள் கிறோம்.

**இரா.தாஸ்** (பொதுச் செயலாளர், தமிழக ஆரம் பப்பள்ளி ஆசிரியர் கூட் டணி): தமிழ்நாட்டு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் பாரம்பரியத்தை மீட் டெத்து பழைய நிலைக்கு கல்வித் துறையை தலைநி மிர செய்துள்ளார். அதற்கு உறுதுணையாக பள்ளிக் கல்வி அமைச்சர் செயல் பட்டு மீண்டும் பள்ளிக் கல்வி இயக்குநர் பணியி டத்தை வழங்கி இருப்ப தற்கு தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்காக எங்களது இயக்கம் பல்வேறு முயற்சி களை மேற் கொண்டது தொடர்ந்து தமிழ்நாடு முதல்வர் மற்றும் அமைச்ச ரிடம் நேரடியாக பேசி யுள்ளோம்.

இவ்வாறு கூறினர்.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## காஞ்சி மணிமொழியார்

**ஜூன் 7 (1972)**



**சென்னை மாநகரத்தில் கழகம் வளர்ந்திட தொய்வின்றி பணியாற்றியவர்.**

**1937–38ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தவர்.**

**கழகத்தில் துணைப் பொதுச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**1962ஆம் ஆண்டு சென்னை தியாகராயநகர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.**

**பேரறிஞர் அண்ணா அவர்களின் பெருமதிப்புக்குப் பாத்திரமானவர்களில் முக்கியமானவர் இவர்.**

**“சின்ன உருவமும், சன்னமான குரலும், பொன்னான நெஞ்சும், மின்னும் விழிகளும் படைத்தவராய், துடிப்புமிகு நடையும், துவளாச் சுறுசுறுப்பும், தொண்டாற்றும் ஆர்வமும், தியாக மனப்பாங்கும் ஒருங்கே ஒருருவாய்த் திகழ்ந்தவர்” என தலைவர் கலைஞர் அவர்களாலேயே புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**